பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

23 01 2025 THURSDAY 7.15 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப்போட்டிகள், விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- ஸ்மார்ட் போன்கள் ஏற்றுமதியில் இந்தியா உலக அளவில் இரண்டாவது இடத்தில் உள்ளதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

- மகா கும்பமேளா குறித்த செய்திகளை உடனுக்குடன் வழங்குவதற்காக பிரஸார் பாரதி விரிவான ஏற்பாடுகளை செய்திருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

- இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின்கீழ், 18 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு பயிற்சி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- பெங்களூரு சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sahaja Yamalapalli காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<<>>>>>

கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப்போட்டிகள் தொடங்கியிருப்பது விளையாட்டுத்துறைக்கு புதிய உத்வேகத்தை அளித்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

லடாக்கின் லே-யில் இன்று கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப்போட்டிகள் தொடங்கியிருப்பதையொட்டி, பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில், நாடு முழுவதும் விளையாட்டுப்போட்டிகளை மேம்படுத்துவதற்கு அரசு உறுதிபூண்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

லடாக் மற்றும் ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசங்கள் விளையாட்டு கலாச்சாரத்திற்கு மேம்பட்டிருப்பதோடு மட்டுமல்லாமல், சுற்றுலாத்துறையிலும் முன்னேற்றம் அடைய வழிவகை செய்யப்பட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

நாட்டின் பன்முகத்தன்மையை வெளிப்படுத்தும் வகையில், கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப்போட்டிகள் அமையும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறையில் நிபுணத்துவத்தை அடுத்தக்கட்டத்திற்கு கொண்டுசெல்வதற்கான முக்கிய பங்காற்றும் வகையில், கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப்போட்டிகள் அமையும் என்றும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, இந்த போட்டிகள் தொடங்கியதை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

இந்த போட்டிகளைத் தொடர்ந்து தென்னிந்தியாவில் கடற்கரை விளையாட்டுப்போட்டிகளுக்கான மிகப்பெரும் வாய்ப்புகளை உருவாக்க திட்டமிட்டிருப்பதாகவும் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

ஸ்மார்ட் போன்கள் ஏற்றுமதியில் இந்தியா உலக அளவில் இரண்டாவது இடத்தில் உள்ளதாக மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ஆங்கில நாளிதழ் ஒன்றில் வெளியான கட்டுரையை தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள திரு அஷ்வினி வைஷ்ணவ், உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டம், உலக அளவிலான போட்டிக்கு வழிவகுத்திருப்பதாக கூறினார்.

திறன் பயிற்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம் போன்ற நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுத்ததால், செல்போன் உற்பத்தி அதிகரித்ததாக அவர் தெரிவித்தார்.

உலக அளவில் மிகச்சிறந்த தரமான செல்போன்களை வழங்குவதற்கான போட்டிக்கு இந்தியா தயாராக உள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின்கீழ், 18 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு பயிற்சி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

குஜராத்தில் இயற்கை வேளாண்மை தொடர்பான இரண்டு நாள் தேசிய பயிலரங்கில் உரையாற்றிய வேளாண்துறை செயலர் டாக்டர் Devesh Chaturvedi, இந்த இயக்கத்திற்கு விவசாயிகளிடையே வரவேற்பு கிடைத்துள்ளதாக கூறினார்.

விஞ்ஞானிகள் ஆதரவு மற்றும் விவசாயிகளின் பங்களிப்புடன் இந்த இயக்கம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் டாக்டர் Devesh Chaturvedy தெரிவித்தார்.

<<<<<>>>>>

தலைநகர் தில்லியின் கடமைப்பாதையில் வரும் 26-ஆம்தேதி நடைபெறவுள்ள குடியரசு தின விழாவை முன்னிட்டு, முழு அணிவகுப்பு ஒத்திகை இன்று நடைபெற்றது.

T-90 பீரங்கிகள், ஏவுகணைகள், பினாக்கா ராக்கெட்டுகள் உள்ளிட்ட நாட்டின் ராணுவ பலத்தை பறைசாற்றும் பல்வேறு ஆயுதங்கள் அணிவகுப்பு ஒத்திகையில் இடம்பெற்றிருந்தன.

பாதுகாப்புப்படையினரும் மிடுக்குடன் அணிவகுப்பில் பங்கேற்றனர்.

நாட்டின் பன்முக கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் கண்கவர் அணிவகுப்புடன் விமானப்படையின் போர் விமானங்கள் மற்றும் ஜெட் விமானங்களும் இந்த ஒத்திகையில் இடம்பெற்றன.

இதனிடையே, புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மேஜர் ஜென்ரல் Sumit Mehta, குடியரசு தின அணிவகுப்பில், ராணுவத்தில் பயன்படுத்தப்படும் அதிநவீன இயந்திரங்கள் மற்றும் ஆறு படைப்பிரிவுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்க இருப்பதாக தெரிவித்தார்.

பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் புதிய கண்டுபிடிப்புகள், மற்றும் போர்க்களத்தில் செயல்படும் கண்காணிப்பு கருவிகளும் அணிவகுப்பில் இடம்பெறும் என்று Sumit Mehta குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்பதற்கான இணையதள பதிவு அடுத்த மாதம் ஒன்றாம் தேதி நிறைவடையும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

மாணவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், சிறுதொழில் முனைவோர், மகளிர், கைவினைக்கலைஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இதில் பங்கேற்கலாம் என்று கல்வித்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மத்திய பல்கலைக்கழகங்களில் பயிலும் தமிழகத்தை சேர்ந்த மாணவர்கள் இதில் பங்கேற்குமாறும் அந்த செய்திக்குறிப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

*(சவுண்ட் பைட் - Song - 8 செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளா தொடங்கியது முதல் இதுவரை 9 கோடியே 73 லட்சத்திற்கும் மேற்பட்டோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர்.

கும்பமேளாவில் இன்று ஏராளமான வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் புனித நீராடினர்.

இதனிடையே, கும்பமேளா வளாகத்தை இணைக்கும் வெளிப்புற மைதானங்களிலும், அணுகு சாலைகளிலும் 200 தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சி குறித்த செய்திகளை பிரயாக்ராஜிலிருந்து ஒளி – ஒலிபரப்பும் தூர்தர்ஷன், ஆகாஷவாணி முகாம் அலுவலகத்தை தகவல் ஒலிபரப்புத்துறை செயலாளர் திரு. சஞ்சய் ஜாஜூ இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மகா கும்பமேளா குறித்த செய்திகளை வழங்குவதற்காக பிரஸார் பாரதி விரிவான ஏற்பாடுகளை செய்திருப்பதாக கூறினார்.

பல்வேறு நிகழ்ச்சிகள் குறித்த தகவல்களையும், கும்பமேளாவின் சிறப்புகளையும் தூர்தர்ஷனும், ஆகாஷவாணியும் வழங்கி வருவதாக அவர் கூறினார்.

*(சவுண்ட் பைட் - song – 8 நொடிகள்)*

<<<<<>>>>>

நாட்டின் கலாச்சாரத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு உலக அளவிற்கு கொண்டு சென்றுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் அகமதாபாதில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கடந்த பத்தாண்டுகளுக்குமுன் நிறைவேற்றப்படாமல் நிலுவையில் இருந்த ஏராளமான திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றியிருப்பதாக கூறினார்.

இந்தியாவின் அனைத்து மொழிகளையும், மத வழிபாட்டுத்தலங்களையும் மத்திய அரசு மேம்படுத்தியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பிரயாக்ராஜில் 144 ஆண்டுகளுக்கு பின்னர், சிறப்பாக நடைபெற்றுவரும் மகா கும்பமேளா நிகழ்ச்சி, ஒட்டுமொத்த உலகிற்கும் அடையாளமாக திகழ்வதாகவும், ஒற்றுமை மற்றும் சமாதானத்திற்கான செய்தியை இந்த கும்பமேளா அளித்து வருவதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் அடுத்த 7 நாட்களில் மிகத் தீவிரமான காட்டுத் தீ ஏற்பட வாய்ப்புள்ளதாக தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜம்மு பகுதியில் நீண்டகாலமாக பயன்படுத்தப்படாமல் உள்ள வைக்கோல் காரணமாக, வனப்பகுதியில் தீப்பற்றும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும், அதுபோன்ற சூழ்நிலை உருவானால் உடனடியாக அவசர தொலைபேசி எண்ணை பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<<>>>>>

நீதிமன்றம் பிறப்பிக்கும் பிடிவாரண்டுகளை முறையாக அமல்படுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் செயல் திட்டத்தை உருவாக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம், காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கினை விசாரணை செய்த நீதிபதி திரு ஜெகதீஷ் சந்திரா இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

முன்னதாக, நீதிமன்ற உத்தரவின்பேரில், கீழ்ப்பாக்கம் துணை ஆணையர் பொறுப்பை கூடுதலாக கவனித்துவரும் மயிலாப்பூர் துணை ஆணையர் திரு ஹரிசரண், விசாரணையின்போது நேரில் ஆஜராகி விளக்கம் அளித்தார்.

இவ்வழக்கின் விசாரணை வரும் 31-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

*<<<<<>>>>>*

*விளையாட்டுச் செய்திகள்*

பெங்களூருவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sahaja Yamalapalli காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-1, 3-6, 6-1 என்ற செட்கணக்கில் ரஷ்யாவின் Maria Timofeeva–வை வென்றார்.

-------------

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கோப்பை மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 60 ரன் வித்தியாசத்தில் இலங்கையை வென்றது.

கோலாலம்பூரில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற இலங்கை முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதையடுத்து பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 9 விக்கெட் இழப்பிற்கு 118 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக ‘Gongadi Trisha 49 ரன் எடுத்தார்.

119 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இலங்கை தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்கத்தொடங்கி, 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 58 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

இந்த வெற்றியின் மூலம், இந்தியா சூப்பர் ஆறு சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

-------------

ஃபிடே சர்வதேச செஸ் வீரர்கள் தரிவரிசையில் இந்தியாவின் குகேஷ் முன்எப்போதும் இல்லாத வகையில், நான்காவது இடத்தை பிடித்துள்ளார்.

அவர், 2 ஆயிரத்து 784 புள்ளிகளுடன் இந்த இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

பல ஆண்டுகளாக அதிக புள்ளிகளை பெற்றிருந்த எரிகேசி, 2 ஆயிரத்து 779 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

*<<<<<END>>>>>*